V11Com

விருதுநகர் மாவட்டம்
காலாண்டு பொதுத்தேர்வு - 2024

-----

வகுப்பு 11

கால அளவு: 3.00 மணிநேரம் வணிகவியல் மதிப்பெண்கள்: 90

பகுதி - I

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20×1=20

1) வியாபாரம் மற்றும் வணிகம் ............ பேரரசில் பொதுவானவையாக இருந்தது.
அ) பாண்டியர் ஆ) பல்லவர் இ) சேரர் ஈ) சோழர்

2) தொழிலின் முதன்மைக் குறிக்கோள் ..........
அ) இலாபம் ஈட்டாமல் இருத்தல் ஆ) சிறப்புத் தேர்ச்சி
இ) இலாபம் ஈட்டுதல் ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

3) ஒரு முழுப்பொருள் தயாரிக்கப் பல நிலைகளை கடக்கும் உற்பத்தி முறை என்பது
அ) பகுப்பாய்வு உற்பத்தித் தொழில் ஆ) செயற்கை பொருள் உற்பத்தித் தொழில்
இ) தொடர்முறை உற்பத்தித் தொழில் ஈ) ஒன்று திரட்டும் உற்பத்தித் தொழில்

4) தொழில் அமைப்புகளின் வடிவங்களில் மிகவும் பழமையானது ............
அ) கூட்டுறவுச் சங்கம் ஆ) தனியாள் வணிகம் இ) நிறுமம் ஈ) கூட்டாண்மை

5) கூட்டாண்மை .............. உண்டாக்கப்படுகிறது
அ) அரசின் வழிகாட்டல் ஆ) ஒப்பந்தத்தால்
இ) நட்பின் அடிப்படையில் ஈ) பல நபர்களுக்கிடையிலான உறவால்

6) கீழ்க்கண்டவற்றுள் எது நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்டமன்றங்கள் இயற்றிய சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது?
அ) பட்டயநிறுமம் ஆ) அயல்நாட்டு நிறுமம்
இ) அரசு நிறுமம் ஈ) சட்டமுறை நிறுமம்

7) ராக்டேல் சமமான முன்னோடிகளின் சொசைட்டியினை தோற்றுவித்தவர் ...........
அ) ராபர்ட் ஓவன் ஆ) H.C.கால்வெர்ட் இ) டால்மாக்கி ஈ) லம்பேர்ட்

8) பன்னாட்டு நிறுமங்கள் பின்வருவனவற்றில் யாரால் கட்டுப்படுத்தப்படுகின்றன?
அ) கிளைகள் ஆ) அதன் துணை நிறுவனங்கள்
இ) தலைமையகம் ஈ) நாடாளுமன்றம்

9) அரசு நிறுவனங்களின் முதன்மையான நோக்கம்
அ) இலாபம் ஈட்டுதல் ஆ) வேலை வாய்ப்பை உருவாக்குதல்
இ) மக்களுக்கு சேவை செய்தல் ஈ) மேற்கூறிய அனைத்தும்

10) ரூபாய் நோட்டுகளை வெளியிடுவதற்கு எந்த வங்கிக்கு அதிகாரம் உள்ளது?
அ) மைய வங்கி ஆ) வணிக வங்கிகள்
இ) கூட்டுறவு வங்கிகள் ஈ) வெளிநாட்டு வங்கிகள்

11) உள்ளூர் பகுதி வங்கிகள் ஊக்குவித்து வருவது
அ) தொழிற்துறை வளர்ச்சி ஆ) கிராம சேமிப்பு
இ) விவசாய வளர்ச்சி ஈ) வணிகச் சேமிப்பு

12) RTGs மூலம் குறைந்தபட்சம் எவ்வளவு பணம் பரிமாற்றம் செய்ய முடியும்?
அ) ₹ 2 லட்சம் ஆ) எவ்வளவு தொகை வேண்டுமானாலும்
இ) ₹ 5 லட்சம் ஈ) ₹ 50,000

13) புகையிலை, பருத்தி போன்ற பொருட்களை பாதுகாப்பாக வைக்க பயன்படும் பண்டக காப்பகம் .............
அ) தட்பவெப்பநிலை கட்டுப்பாட்டு பண்டக காப்பகம்
ஆ) பொதுவான பண்டக காப்பகம்
இ) குளிர்பதன பண்டக காப்பகம்
ஈ) சிறப்புப் பொருள் பண்டக காப்பகம்

14) வான்வழி அனுப்பீட்டு இரசீது ............... அசல் பாகங்களில் தயாரிக்கப்படுகிறது.
அ) ஒன்று ஆ) இரண்டு இ) மூன்று ஈ) நான்கு

15) ............. ஒரு பொதுக்காப்பீட்டு வகையினைச் சார்ந்தது அல்ல
அ) கடல்சார் காப்பீடு ஆ) ஆயுள் காப்பீடு இ) உடல்நலக்காப்பீடு ஈ) தீக்காப்பீடு

16) பொருந்தாத இணையைக் கண்டறிக
அ) C2B - Monster.com ஆ) B2B - Flipkart
இ) B2G - Alibaba ஈ) C2C - OLX

17) பின்வருவனவற்றில் எது பொருள் அளிப்பாளர்கள் தொடர்பான பொறுப்புணர்வு அல்ல
அ) நியாயமான விதிமுறைகள் மற்றும் பொறுப்புறுதிகளை வழங்குதல்
ஆ) கடனுக்கான காலக்கெடுவினை நியாயமான முறையில் அளித்தல்
இ) கடன் தொகையை தவணைக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்துதல்
ஈ) குறித்த காலத்தில் பயிற்சி அளித்து அவர்களின் செயல்திறனை தரம் உயர்த்துதல்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

18) பின்வருவனவற்றில் எது சமுதாயத்திற்கு பொருட்களின் விற்பனையை அதிகரிக்கச் செய்ய உதவுகிறது?
அ) தொழில்முறை நிர்வாகம் ஆ) வணிகத்தின் வெற்றி
இ) விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஈ) ஒழுக்கவியல்

19) கடன் பத்திரதாரர்கள் ஒரு நிலையான .......... விகிதம் பெறத் தகுதியுடையவர்கள்
அ) பங்காதாயம் ஆ) இலாபம் இ) வட்டி ஈ) விகிதம்

20) ............ என்பது நிறுமங்கள் அயல்நாட்டு செலாவணியைப் பெறுவதற்காகவே வெளியிடப்படும் ஒரு சிறப்பு வகைப் பத்திரமாகும்
அ) அரசு பத்திரங்கள் ஆ) அந்நிய செலவாணி மாற்றுபத்திரம்
இ) பெரு நிறுவன பத்திரங்கள் ஈ) உலகளாவிய வைப்பு இரசீது

## பகுதி - II

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. வி.எண்: 30 கட்டாய வினா** **7×2=14**

21) நாளங்காடி என்றால் என்ன?
22) வணிகத்தை வரையறுக்கவும்
23) கர்த்தா என்பவர் யார்?
24) துறைவாரி அமைப்புகளுக்கு இரண்டு உதாரணங்களைக் குறிப்பிடுக.
25) குளிர்பதன பண்டகக் காப்பு என்றால் என்ன?
26) போக்குவரத்து - வரையறுக்கவும்.
27) வணிக வங்கிகளின் பொருள் தருக.
28) தொழில் செயல்முறை புறத்திறனீட்டல் (BPO) என்றால் என்ன?
29) உலகளாவிய வைப்பு இரசீது என்றால் என்ன?
30) தூய கடன் என்றால் என்ன?

## பகுதி - III

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி. வி.எண்: 40 கட்டாய வினா** **7×3=21**

31) மருவூர்ப்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கத்தின் பொருள் தருக.
32) **சிறுகுறிப்பு வரைக.** (அ) பிரித்தெடுக்கும் உற்பத்தி தொழில்கள் (ஆ) மரபுசார் உற்பத்தி தொழில்கள்
33) கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன?
34) பொது கழகங்கள் என்றால் என்ன?
35) தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம் - விளக்குக.
36) பண்டக காப்பாளர் இரசீதிலிருந்து, பண்டக சான்றாணை வேறுபடுத்துக.
37) சமூகப் பொறுப்புணர்வின் வகைகளை வரிசைப்படுத்துக.
38) அடகு கடன் என்றால் என்ன?
39) அந்நிய நேரடி முதலீட்டின் ஏதேனும் மூன்று தீமைகளை விளக்குக.
40) வேகமான மற்றும் விலையுயர்ந்த போக்குவரத்து என்பது எது? அதன் இரண்டு நன்மைகளை எழுதுக.

## பகுதி - IV

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **7×5=35**

41) அ) வணிகத்தின் பல்வேறு தடைகள் யாவை? (ஏதேனும் 5)
**(அல்லது)**
ஆ) தொழில், சிறப்புத்தொழில், வேலைவாய்ப்பு ஓர் ஒப்பீடு செய்க. (ஏதேனும் 5)

42) அ) தனியாள் வணிகத்தின் நன்மைகள் ஏதேனும் ஐந்தினை விவரிக்கவும்.
**(அல்லது)**
ஆ) கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம் யாது? (ஏதேனும் 5)

43) அ) காப்பீட்டின் கோட்பாடுகள் எவையேனும் ஐந்தினை விவரிக்கவும்
**(அல்லது)**
ஆ) இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு பணிகளை விரிவாக வகைப்படுத்துக. (ஏதேனும் 5)

44) அ) ஏட்டுக்கடன் முகமையின் சிறப்பியல்புகளை விவரிக்கவும்
**(அல்லது)**
ஆ) தொழில் நெறிமுறைகளின் அடிப்படைக் கூறுகளை விவரிக்கவும்

45) அ) உலகளாவிய வைப்பு இரசீதையும், அமெரிக்க வைப்பு இரசீதையும் வேறுபடுத்துக. (ஏதேனும் 5)
**(அல்லது)**
ஆ) ஏதேனும் ஐந்து தனிநபர் முதலீட்டு வழிகளை விளக்குக.

46) அ) எவையேனும் ஐந்து வகையான பண்டகக் காப்பகங்களை விவரிக்கவும்
**(அல்லது)**
ஆ) வணிக வங்கிகளால் நிகழ்த்தப்படும் பல்வேறு வகையான முதன்மை செயல்பாடுகளை விவரிக்கவும்

47) அ) நிலப்போக்குவரத்தின் பல்வேறு வகைகளை விளக்குக. (ஏதேனும் 5)
**(அல்லது)**
ஆ) துறைவாரி நிறுவனங்களின் நன்மைகள் ஏதேனும் ஐந்தினை விவரிக்கவும்.

- - - - - - -

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com